## சுருக்கம்

சின்னமனூர் நகர்மன்றம் – முறையாக செயல்படாமை – விதி முறைகளுக்கு மாறாக அதிகாரங்களை செயல்படுத்தி கடும் தவறு இழைத்திருப்பது – நகர்மன்றத்தினை கலைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை**

**அரசாணை (நிலை) எண் 204**

**நாள் 17.10.2008**

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 1

**படிக்க:**

1. நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.5499/2008/அ2 நாள் 22.9.2008.
2. அரசு கடித எண்.33959/ந.நி.5/2008–1 நாள் 22.9.2008.
3. தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக கடித எண்.78 நாள் 22.9.2008.
4. நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண். 5499/2008/அ2 நாள் 25.9.2008.
5. சின்னமனூர் நகர்மன்றத் தலைவர் தன்னிலை விளக்கக் கடித நாள் 26.9.2008.
6. சின்னமனூர் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் 21 நகர்மன்ற உறுப்பினர்களின் கடிதம் நாள் 25.9.2008.
7. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.45617/2008/எச்3 நாள் 7.10.2008.
8. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை வழக்கு நீதிப்பேராணை எண் MP(MD) No.1 of 2008 in W.P(MD)No.8402 of 2008 தீர்ப்பு நாள் 29.9.2008.

---

**ஆணை:**

நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் தமது முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சின்னமனூர் நகராட்சியில் சாதாரணக் கூட்டம் 27.06.2008–ஆம் தேதியன்று நடைபெற்றதாகவும், அதன்பின்பு 1.4.2008 முதல் பொது சொத்துவரி சீராய்வு மூலம் வரி உயர்வு செய்யும் பொருட்டும் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் அவசர மன்றக் கூட்டம் 18.7.2008–இல் கூட்ட தீர்மானிக்கப்பட்டதாகவும், அன்றைய தினம்

போதிய நகர்மன்ற உறுப்பினர்கள் வருகையின்மையால், நகர்மன்றக் கூட்டம் நடைபெறவில்லை என்றும், மேலும், இது தொடர்பாக, 31.7.2008ஆம் தேதி சாதாரணக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டதாகவும், அன்றைய தினமும் போதிய நகர்மன்ற உறுப்பினர்கள் வருகையின்மையால் கூட்டம் இரண்டாவது முறையாக நடைபெறவில்லை என்றும், மேலும், 1.10.2008 முதல் தொழில்வரி உயர்வு சம்மந்தமாக வரி சீராய்வு செய்யும் பொருட்டு 29.8.2008ம் தேதி அவசரக் கூட்டத்தில் மன்றப் பொருள் வைக்கப்பட்டு, அன்றைய தினமும், போதிய நகர்மன்ற உறுப்பினர்கள் வருகையின்மையால், மூன்றாவது முறையாக கூட்டம் நடைபெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் சின்னமனூர் நகர்மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும் பொருட்டு, 19.8.2008—ம் தேதியன்று, 24 நகர்மன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு, இரு நகர்மன்ற உறுப்பினர்கள் மூலம் விண்ணப்பம் தன்னிடம் நேரில் அளிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்த விண்ணப்பம் முறையான படிவத்தில் பூர்த்தி செய்யப்படாததால், தமது அலுவலகத்தால் விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில், 21.7.2008—ம் தேதியன்று அனைத்துக் கட்சியைச் சேர்ந்த நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத்துணைத் தலைவர் ஆகியோர் சின்னமனூரில் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள திலகவதி அழகு சீனிவாசன் திருமண மண்டபத்தில் கூடி சட்டத்திற்குப் புறம்பாக சின்னமனூர் நகராட்சியின் மூலம் செய்யப்படும் வேலைகள் மற்றும் பணி நியமனத்தில் கையூட்டு பிரித்துக் கொள்வது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதன் மூலம் பெறப்படும் தொகையை பங்கு பிரிப்பது குறித்தும் பேச்சு வார்த்தை நடைபெற்றதாகவும், இதில் கருத்து ஒற்றுமை ஏற்படாததால், 21 நகர்மன்ற உறுப்பினர்கள் மேலே கண்ட செயல்பாடுகள் குறித்து சட்டத்திற்குப் புறம்பாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்கள் எனவும் இது தொடர்பாக எழுத்து மூலமான தீர்மானமும் நிறைவேற்றி கையொப்பமிட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார். நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொது மக்களின் வளர்ச்சித் திட்டங்கள் மீது அக்கறையின்மையும் அவர்களுடைய சுயபலன்கள் அனுபவிக்கும் பொருட்டும் நகராட்சி நிர்வாகத்தில் கையூட்டு பெறுவது பற்றியும் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டுள்ளார்கள் என்றும் நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். அதன்பின்பு 24.8.2008—ம் தேதியில் நகர்மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும் பொருட்டு முறையான படிவத்தில் பூர்த்தி செய்து 24 நகர்மன்ற உறுப்பினர்கள் கையொழுத்திட்டு தன்னிடம் நேரில் கொடுத்துள்ளதாகவும், அதன்படி, 24.9.2008—ம் தேதியன்று காலை 10.45 மணிக்கு அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் நகர்மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது குறித்து தமது அலுவலகம் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டு நேரில் கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. சின்னமனூர் நகர்மன்றத் தலைவர் அவர்கள் நகர்மன்றத்தை கலைக்க வேண்டி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் 20.9.2008—ம் தேதியன்று வழக்கு W.P. (MD) No. 8402 of 2008—ல், வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், இதனால், நகராட்சியில் நிறைவேற்ற வேண்டிய சொத்துவரி பொது சீராய்வு, தொழில்வரி உயர்வு செய்தல் மற்றும் இதர வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் மிகவும் தடைபட்டுள்ளதாகவும்,

நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாகவும், எனவே, சின்னமனூர் நகர்மன்றத்தின் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தனது மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையினை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

4. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 41–ன்படி நகராட்சி ஒன்று, அச்சட்டத்தின்படியான தமது கடமைகளை மேற்கொள்வதற்கான தகுதியினை இழக்கும் நிலையில் அல்லது அச்சட்டத்தின்படியான தமது கடமைகளை தொடர்ந்து செயல்படத் தவறினாலோ அல்லது தமது அதிகாரங்களை தவறாக பயன்படுத்தினாலோ, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக அந்நகராட்சியினை குறிப்பிட்ட தேதி முதல் கலைப்பதற்கான ஆணையினை அறிவிக்கையின் வாயிலாக வெளியிடலாம். அவ்வாறு வெளியிடும்முன்னர், மாநில அரசு, தொடர்புடைய மன்றத்தினை கலைப்பதற்கான காரணங்களை மன்றத்திற்கு தெரிவித்து, போதுமான கால அவகாசத்திற்குள் இப்பொருள் குறித்து மன்றத்தின் கருத்தினை பெறவேண்டும். அதன்படி சின்னமனூர் நகராட்சி மன்றத்தின் கருத்தினை கோரப்பட்டது.

5. சின்னமனூர் நகர்மன்ற தலைவர் ஐந்தாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், கடந்த 28.7.2008 ஆம் தேதி அன்று நடைபெற்ற வரிமேல் முறையீட்டுக் குழு அவசரக் கூட்டத்திற்கு முறைப்படி அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பியதாகவும், அதனைப் பெற்றுக்கொண்டு, பெரும்பாலானவர்கள் கலந்து கொள்ளாததால் கூட்டம் மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது எனவும் 21.7.2008 ஆம் தேதியில் தன்னால் எவ்வித கூட்டமும் கூட்டப்படவில்லை எனவும், தனக்கு தெரியாமல் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களால் சின்னமனூரில் உள்ள அழகு சீனிவாசன் திருமண மண்டபத்தில், சட்டத்திற்கு புறம்பாக கூட்டம் நடத்தி, அதில் தனக்குத் தெரியாமல் அவர்களாகவே தீர்மானம் நிறைவேற்றி, இதில் தன்னை கையொப்பமிடுமாறு வற்புறுத்தவே அதற்கு தான் மறுத்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

6. சின்னமனூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்கு சட்ட விரோதமாக எவ்வளவு பணம் திரட்ட வேண்டும் , மேலும் பெறப்படும் பணம் எந்தவகையில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான குற்றச்சாட்டைப் பொறுத்தமட்டில், அந்த குற்றச்சாட்டுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும், உண்மையில் அந்த முடிவானது தனக்கு தெரியாமல், மேற்படி தேதியில் துணைத்தலைவரால் நகராட்சி விதிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் அவர்களாகவே முடிவு செய்து அதனை தீர்மானமாக நிறைவேற்றி அதில் தன்னையும் கையொப்பமிடுமாறு வற்புறுத்தவே, அதற்கு உடன்படாமல் அந்த சட்டத்திற்கு புறம்பான தீர்மானத்தில் தான் கையொப்பமிட மறுத்து விட்டதாக தெரிவித்துள்ளார். சின்னமனூர் நகராட்சியில், துணைத்தலைவர் மற்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் நகராட்சி பணிகள் தொடர்பாக சட்டத்திற்கு புறம்பாக பணம் பெறுவது தெரியவருவதும் இதனால் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப்பணிகளின் தரத்திற்கும், பொது நலனுக்கும், குந்தகம் விளைவிக்கும் வகையில் தெரிந்தே செயல்படுவதும் தெளிவாகிறது என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தமட்டில், தனக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை எனத் நகர்மன்றத் தலைவி தெரிவித்துள்ளார்.

—4

7. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தங்களது பதவியையும், அதன்கீழ் தங்களுக்குண்டான கடமைகளையும் நகராட்சி நிதிக்கும், பொது நலனுக்கும் கடுமையான குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுத்தி வருவதும் நிரூபணமாகிறது என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தமட்டில், தனது பதவி காலத்தில், தனது பதவியையும் அதன் கீழ் தனக்கு உண்டான கடமைகளையும் நகராட்சி விதிக்கும் பொது நலனுக்கும் பாதகம் ஏற்படாதவகையில் செயல்பட்டு வந்ததே உண்மை எனவும், கடந்த மூன்று மாதங்களாக சின்னமனூர் நகராட்சியின் மன்றக் கூட்டங்கள் முறையாக நடைபெறவில்லை என்றும், இதன் மூலம் நகர்மன்றம்,1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அட்டவணை III விதி 1–ன்படி படியான முக்கிய கடமையிலிருந்து தவறிவிட்டதாகவும், இதனால் நகரின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட இயலாத சூழ்நிலையும், நகராட்சியின் நிதி நிலையினை பாதிக்கக்கூடிய பொருள்கள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட இயலாத சூழ்நிலையும் உருவாகி, பொது நலனுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளதும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தமட்டில், சின்னமனூர் நகர்மன்ற தலைவர் என்ற முறையில் தான் முறையான காலங்களில் மற்ற உறுப்பினர்களுக்கு முறையான அறிவிப்பு கொடுத்தும் அதனை பெற்றுக் கொண்ட உறுப்பினர்கள் அவர்களுடைய சதித் திட்டங்களுக்கு உடன்படாத காரணத்தால், தன்னை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் எண்ணத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததால், அந்த கூட்டங்கள் தன்னால் ஒத்தி வைக்கப்பட்டதாக சின்னமனூர் நகர்மன்றத் தலைவி மேலும் தெரிவித்துள்ளார். தனது பணிக்காலத்தில் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு சட்டபடியான தனது கடமைகளையும், பொறுப்புகளையும் அதிகாரங்களையும் நகராட்சி தலைவர் என்ற முறையில் சரியாக செயல்படுத்தி நகரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவே பாடுபட்டுள்ளதாக தெரிவித்து, நகராட்சியில் பெரும்பான்மையான நகர்மன்ற உறுப்பினர்கள் சட்டத்திற்கு புறம்பான முறையில் நகர்மன்ற அலுவலகம் அல்லாத தனியாரிடத்தில் தனக்கு தெரியாமல் கூட்டம் நடத்தி, அதில் சட்டத்திற்கு புறம்பான வகையில் பணம் பெற்று, அதைப் பிரித்துக் கொள்வதாக இயற்றிய தீர்மானத்தில் தன்னை கையொப்பமிடுமாறு துணைத்தலைவர் உட்பட பெரும்பாண்மையான உறுப்பினர்கள் வற்புறுத்தியும், அதில் தான் கையொப்பமிட மறுத்ததால் தன்மீது அவர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்த பிறகும், நகரின் வளர்ச்சிக்காக தான் பாடுபட்டு கொண்டிருக்கும் சூழ்நிலையில், நகர்மன்றத்தை கலைப்பது தொடர்பாக அரசு எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் தான் கட்டுப்படுவதாக தெரிவித்துள்ளார்.

8. நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் அவர்கள், நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தனக்கு உடல்நலக் குறைவு காரணமாக, சின்னமனூர் நகர்மன்ற தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மான பொருள் குறித்து 24.9.2008 அன்று நடைபெற இருந்த கூட்டம் 20.10.2008–ம் தேதியன்று ஒத்திவைக்கப்பட்டு அதற்கான அறிவிப்பு சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் வழியாக 24.09.2008 அன்று நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் உட்பட அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தொலைநகல் (Fax) மூலம் அனுப்பப்பட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட விவரம் சார்பு செய்து அனுப்பும்படி தெரிவிக்கப்பட்டது என்றும், மேற்படி அறிவிப்புக் கடிதம் நகர்மன்றத் தலைவர் தவிர நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள் எவரும் மேற்படி அறிவிப்பினை வாங்க மறுத்து விட்டார்கள் என்றும் சின்னமனூர் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளார்.

9. சின்னமனூர் நகர்மன்றத்தின் துணைத் தலைவர் மற்றும் 21 உறுப்பினர்கள் தங்களது ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசின் 22.9.2008–ம் தேதிய கடிதத்திற்கு விளக்கமளிக்கும் பொருட்டு நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் மதுரை அவர்களின் 22.9.2008–ம் தேதியிட்ட கடித நகல் வேண்டுமென்றும், அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிந்தால்தான், தங்களால் விளக்கம் அளிக்க இயலும் என அரசுக்கு தொலை நகல் (Fax) அனுப்பி, 25.09.2008–ம் தேதியன்று கூட்டப்பட்டுள்ள கூட்டத்தில் பங்கேற்க இயலாது என மேற்படி பொருள் தொடர்பான கூட்டத்தை நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், மதுரை அவர்களே கூட்ட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்கள். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானக் கூட்டம் தவிர மற்ற கூட்டங்களைக் கூட்ட நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு விதிகளில் வழிவகைகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சிகளின் மண்டல இயக்குநர், கூட்டம் கூட்ட வேண்டும் என நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் 21 நகர்மன்ற உறுப்பினர்கள் கூறுவது பொறுப்பையும், கடமையையும் தட்டிக் கழிப்பதாக உள்ளது. 1920–ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை III, விதி 1–ன்படி குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை மன்றக் கூட்டம் கூட்டி, பல்வேறு பொருட்கள் பற்றி அவ்வப்போது முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்நிலையில் கடந்த மூன்று மாதங்களாக மன்ற கூட்டம் முறைப்படி நடைபெறாத நிலையில், சின்னமனூர் நகராட்சி நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்துள்ளது. முறைப்படி வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம், தெருவிளக்கு பராமரிப்பு, பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற அத்தியாவசிய பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற இயலவில்லை. இந்நிலை மேலும் நீடித்தால், அத்தியாவசியப் பணிகளில் சீர்குலைவு ஏற்பட்டு பொதுமக்களின் உயிருக்கும், நலனுக்கும் பெருமளவு ஆபத்து ஏற்பட்டுவிடும். சின்னமனூர் நகராட்சியில் இனிமேல் சுமூகமான நிர்வாகம் நடைபெறவோ, மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து முறைப்படி நடைபெறவோ வாய்ப்பில்லை. எனவே சீரிய நிர்வாகம் நடைபெறவும் நகரமன்றத்தின் சட்டரீதியான கடமைகளை நிறைவேற்றவும் மேலும் ஏற்படும் நிர்வாக சீர்குலைவைத் தடுக்கவும், 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 41–ன்படி சின்னமனூர் நகர்மன்றத்தின் மீது மேல் நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சிகளின் மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தமது நான்காவது மற்றும் ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பரிந்துரை செய்துள்ளனர்.

11. சின்னமனூர் நகர்மன்றத்தின் செயல்பாடுகளை அரசு கவனமுடன் ஆராய்ந்ததில்

(i) சின்னமனூர் நகராட்சியின் நகர்மன்றக் கூட்டம் தொடர்ந்து 3 மாதங்களாக கூட்டப்பட்டும், போதிய உறுப்பினர்களின் வருகையின்மையால் கூட்டப் பொருள்கள் முடிவு செய்ய இயலாத காரணத்தினால் நகராட்சியின் நிர்வாகம் சீர்குலைந்த நிலை தெளிவாகிறது.

(ii) சின்னமனூர் நகராட்சியின் மன்றக் கூட்டங்கள் முறையாக நடைபெறவில்லை, இதன் மூலம் நகர்மன்றம், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அட்டவணை III விதி 1–ன்படி –ன் படியான முக்கிய கடமையிலிருந்து தவறிவிட்டதும், இதனால் நகரின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட இயலாத சூழ்நிலையும், நகராட்சியின் நிதி நிலையினை பாதிக்கக்கூடிய பொருள்கள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட இயலாத சூழ்நிலையும் உருவாகி உள்ளதும், பொது நலனுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளதும் நிரூபணம் ஆகிறது.

(iii) நகர்மன்றத்தின் சில உறுப்பினர்களால் சட்டத்திற்கு புறம்பான கூட்டம் கூட்டப்பட்டு, அதில் தீர்மானமும் இயற்றப்பட்டதாக நகர்மன்றத் தலைவி மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், மதுரை மண்டலம் ஆகியோர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், நகர்மன்றத்திற்கு வெளியே உறுப்பினர்கள் கூட்டம் கூட்டப்பட்டு சட்டத்திற்கு புறம்பான முடிவுகள் எடுக்கப்பட்டதும் நிரூபணம் ஆகிறது.

(iv) நகர்மன்றத்தின் ஒத்துழைப்பின்மை காரணத்தினால் பொது சொத்து வரி சீராய்வுப் பணிகள், தொழில்வரி சீராய்வு மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற மக்களுக்கான அத்தியாவசியப் பணிகள் நடைபெறாமல் தேக்க நிலை அடைந்துள்ளது தெளிவாகிறது.

(v) மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தங்களது பதவியையும், அதன்கீழ் தங்களுக்குண்டான கடமைகளையும் நகராட்சி நிதிக்கும், பொது நலனுக்கும் கடுமையான குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுத்தி வருவது நிரூபணமாகிறது.

(vi) சின்னமனூர் நகர்மன்றத்தினை கலைப்பது குறித்த தன்னிலை விளக்கத்தினை அளிக்கக் கோரும் அரசின் கடிதத்தின் மீது விவாதம் மேற்கொள்ளவிருந்த கூட்டத்திற்கு கூட, போதிய உறுப்பினர்களின் வருகையின்மையால் கூட்டம் நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டது உறுப்பினர்கள் தங்கள் கடமையையும், பொறுப்பையும் தட்டிக் கழிப்பதாக உள்ளது இதன் மூலம் தெளிவாகிறது.

(vii) சின்னமனூர் நகர்மன்றத்தினை கலைப்பது தொடர்பான அரசின் தன்னிலை விளக்கத்திற்கு இதுநாள்வரை நகர்மன்றம் முறையான தனது பதிலை அரசிற்கு அளிக்கவில்லை.

12. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 29.9.2008 நாளிட்ட தீர்ப்பில் நீதிப்பேராணை எண்.MP(MD) No. 1/2008 க்குரிய W.P (MD) No. 8402/2008–ல் நகர்மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இடைக்காலத் தடைவிதித்தும், நகராட்சிகள் சட்டப் பிரிவு 41–ன்படி அரசால் வழங்கப்பட்ட நகர்மன்றத்தின் தன்னிலை விளக்கக் கடிதத்தின் மீது ஏதாவது ஒரு முடிவினை ஆணை கிடைக்கப்பெற்ற மூன்று வாரக் காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்திரவிட்டுள்ளது. மேலும் இப்பொருள் சம்பந்தப்பட்ட மற்றொரு

—7

115



வழக்கு நீதிப்பேராணை எண். 8725/2008—ல் 30.9.2008 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

13. சின்னமனூர் நகர்மன்றம் முறையாக செயல்பட தகுதியில்லாமல் இருப்பதும், சட்டப்படியான தனது கடமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் செயல்படுத்துவதில் கடும் தவறு (grave offence) இழைத்திருப்பதும், அதன் மூலம் நகராட்சியின் நிதி நிலைமைக்கும், பொது நன்மைக்கும் குந்தகம் விளைவித்திருப்பதும் நிரூபிக்கப்பட்டிருப்பதால், 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 41 (1)—ன்கீழ் அரசிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி சின்னமனூர் நகர்மன்றத்தைக் கலைத்து அரசு ஆணையிடுகிறது.

14. மேலும், சின்னமனூர் நகர்மன்றத் தலைவரின் பொறுப்புகளையும், நகர்மன்றத்தின் பொறுப்புகளையும், ஏற்று செயல்படுத்த, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 41(3) (b)—ன்படி நகர்மன்றம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், மதுரை அவர்களை தனி அலுவலராக நியமித்தும் பிரிவு 41(1) (b)—ன்கீழ் புதிய நகர்மன்றத்தை அமைப்பதற்கான நாளாக 15.4.2009—யை நிர்ணயித்தும் அரசு ஆணையிடுகிறது.

15. மேலே பத்தி 13 மற்றும் 14—இல் குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்குமுகத்தான், இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ள அறிவிக்கை 17.10.2008ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் (Tamil Nadu Government Gazettee Extraordinary) வெளியிடப்படுகிறது. இந்த ஆணை மற்றும் அறிவிக்கைகளின் அடிப்படையில் தேவையான அனைத்து மேல்நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை ஆகியோரை இவ்வாணையின் மூலம் அரசு அறிவுறுத்துகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை—600 079.
(அரசிதழில் விளம்பலறிவிக்கை வெளியிடுவதற்காகவும் அறிவிக்கையின் 50 நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை— 600 005.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை.
சின்னமனூர் நகர்மன்றம், (சின்னமனூர் நகர்மன்றத் தலைவர் வழியாக)
நகராட்சி ஆணையர், சின்னமனூர் நகராட்சி, தேனி மாவட்டம்.
மாவட்ட ஆட்சியர், தேனி மாவட்டம்.
நகல்: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2 மற்றும் தேர்தல்) துறை, சென்னை— 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
17/10/08

நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ஆணையாளர் வழியாக அனுப்புவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

அரசு ஆணையை பெற்றுக் கொண்டேன்

19.10.08